திரு. மீ. கலியாணசுந்தரம் : சில ராஜ்யங்களில் தளர்த்தப்பட்டாலும் மதுவிலக்கு ரத்தாகாது என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் நம்முடைய அண்டை ராஜ்யங்களிலே சில இடங்களில் மது விலக்குச் சட்டமே கிடையாது. அதனாலே நம்முடைய ராஜ்யம் பாதிக்கப் படுகிறது. இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சில ராஜ்யங்களில் தளர்த்தப் படுகிறது என்று சொன்னேன். மகாராஷ்டிரா மாநிலத்தில் நம்முடைய மாநிலத்தைக்காட்டிலும் கண்டிப்பான முறையைக் கையாண்டு வந்தார்கள். அது இப்பொழுது அங்கே தளர்த்தப்பட்டிருக்கிறது. இது தொல்லை கொடுப்பது உண்மைதான். ஆனால், அதைப்பற்றி இந்த மாநிலம் ஒன்றும் செய்யமுடியாது. இதையெல்லாம் கவனித்து எவ்வளவு கண்டிப்பாக இருக்கமுடியுமோ அவ்வளவு கண்டிப்பாக இருந்து வருகிறோம்.

திரு. மு. கருணாநிதி : மதுவிலக்கு அமலில் இருக்கின்ற காரணத்தால் நாடகம், திரைப்படம், இவைகளிலே "மது அருந்தலாம்" என்று அழிவுரை கூறுகின்ற காட்சிகள் வந்தால் அவை தடைசெய்யப்படுகின்றன. ஆனால் "கள் வேண்டுவோர் கழகம்" என்ற ஒரு கழகம் மதுவேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகிறது. அப்படிச் செய்வது சட்டத்திற்குப் புறம்பானது அல்லவா ? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டத்திற்குப் புறம்பானதுதான். ஆனால், ஜனநாயகத்தின் பேரில் அவர்கள் சில உரிமைகள் கோருகிறார்கள்.

அனாதைக் குழந்தைகள்

*130 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964–65-ல் பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்டு, ஆறு, வாய்க் கால் போன்ற இடங்களில் விட்டுச்செல்லப்பட்ட குழந்தைகள் எத்தனை, மாவட்டவாரியாக ?

(இ) அவைகளுள், எடுத்துக் காப்பாற்றப்பட்டவை, இறந்துபோன பின் கண்டு பிடிக்கப்பட்டவை முறையே எத்தனை, மாவட்டவாரியாக ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) : வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் ஆறு குழந்தைகள் அவற்றின் பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்டு ஆற்றோரங்களில் விட்டுச் செல்லப்பட்டனர். இவ்வாறு விட்டுச்செல்லப்பட்ட ஆறு குழந்தைகளில் ஒன்று உயிருடன் இருக்கிறது. மற்றவை இறந்துவிட்டன.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இந்த அனாதைக் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக, பெற்று விடப்பட்டுக்கிடக்கிற சிசுக்களைக் கவனிப்பதற்காக, அரசாங்கமே முன்வந்து ஹாஸ்டல் மாதிரி, ஒரு விடுதி கட்ட முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏற்கனவே இதற்காக ஏற் படுத்தப்பட்டிருக்கிற ஸ்தாபனங்களுக்கு பெற்று விடப்படுகின்ற அனாதைக் குழந்தைகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

அம்மை நோய்

*131 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் நகரத்தில் 1965 ஜூலை முதல் டிசம்பர் முடிய அம்மை நோயால் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

28th February 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : திண்டிவனம் நகராட்சியில் 1965 ஜூலை முதல் 1965 டிசம்பர் வரையுள்ள கால அளவில் பெரிய அம்மை நோயால் எவரும் இறக்கவில்லை.

திரு. ஆ. தங்கவேலு : தலைவரவர்களே, திண்டிவனம் நகரத்தில் சுகாதார அதிகாரிகளின் கவனக் குறைவால் 1965 ஜூலையிலிருந்து டிசம்பர் முடிய பெரிய அம்மையினாலும், சிறிய அம்மையினாலும் பல பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஆனால், அதை மறைத்துவிட்டு வேறு வியாதியால் இறந்தார்கள் என்று எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. இனிமேலாவது எந்த வியாதியால் இறந்தார்களோ அந்த வியாதியையே எழுதிவைக்கும்படி உத்திரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூலக் கேள்வியில் 1965 ஜூலையிலிருந்து டிசம்பர் முடிய அம்மை நோயால் இறந்தவர்கள் எவ்வளவு என்றுதான் கேட்கப்பட்டது. அதற்குத்தான் 1965 ஜூலையிலிருந்து 1965 டிசம்பர் வரை அம்மை நோயால் ஒருவரும் இறக்கவில்லை என்று கூறினேன். ஆனால் அதற்கு முன்பு பிப்ரவரியில் 2 பேர்கள் இறந்து விட்டார்கள்.

கனம் சபாநாயகர் : கணக்குத் தப்பாக எழுதிவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள்.

Films

* 132 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have proposed to prohibit exhibition of pictures depicting the life and activities in night-clubs of various countries, in the cinema houses of the State ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரிப் படங்கள் சுமார் ஓராண்டுக்கு மேலாக ராஜ்யத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. கடைசியாக, " இரவிலே தமிழ் நாடு " என்று யாராவது படம் எடுத்து தமிழ் நாட்டின் கவுரவம் சந்திக்கு வந்தால்தான் சொரணை ஏற்பட்டு இம்மாதிரிப் படங்களுக்குத் தடை விதிக்க முடிவு எடுப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதை அனுமதிக்கும் அதிகாரம் சினிமாட்டோகிராப் ஆக்டின்படி மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது. இதிலே ஸ்டேட் கவர்ன்மெண்ட் தலையிட அந்த ஆக்டின்படி ப்ரொவிஷன் கிடையாது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆபாசங்கள் தடுக்கப்படுமா என்பதுதான் கேள்வி. ஆபாசங்கள் நம்முடைய திடகாத்திரத்திற்கும், ஆரோக்கியத்திற்கும், மனவளத்திற்கும் கேடு பயப்பதாகும். ஆகவே, அவை தடுக்கப்பட வேண்டும். அதோடு கோயில்களில் இருக்கிற ஆபாசங்கள், கிருஷ்ணன் படங்கள், காமக் களஞ்சியமாக இருக்கும் திருப்புகழ் இவற்றையெல்லாம் கூடத் தடுக்க அரசாங்கம் மசோதா கொண்டு வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் இந்தப் படங்களைப் பற்றி சென்ட்ரல் போர்டு ஆப் பிலிம் சென்சாருக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த மாதிரிப் படங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற படங்கள்தான், நம்முடைய நாட்டில் அவ்வளவு கேவலமான நிலைமை இல்லை. வெளிநாட்டிலிருந்து வரக்